**செ.வெ.எண்-62** **நாள்-24.02.2021**

# அரியலூர் மாவட்டம்
# மாண்புமிகு தமிழக முன்னாள் முதலைமைச்சர் அம்மா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு தின மாரத்தான் போட்டியினை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

அரியலூர் மாவட்ட ஆட்சியரகத்தில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் வாயிலாக மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு தினம் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் அரியலூர் அரசு பள்ளிகளில் பெண் சாதனையாளர் என்ற தலைப்பில் வினாடி வினா, மாறுவேடப்போட்டி மற்றும் மெதுவாக சைக்கிள் ஓட்டும் போட்டிகள் ஆகியவை நடத்தப்பட்டு, போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை மாண்புமிகு தமிழ்நாடு அரசு தலைமைக்கொறடா **தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் இன்று (24.02.2021) வழங்கினார்கள்.

பின்னர், மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு தின உறுதி மொழியினை அனைத்து பள்ளி மாணவிகள் மற்றும் அரசு பணியாளர்களும் உறுதி மொழி ஏற்றனர்.

அதனை தொடர்ந்து, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலிருந்து பள்ளி மாணவியர்களின் மாராத்தான் நிகழ்ச்சியை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்து, வெற்றிப் பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்கள்.

**இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் தெரிவித்ததாவது.**

மாண்புமிகு முன்னாள் தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் பிறந்த நாளான பிப்ரவரி 24 மாநில பெண் குழந்தைகள் தினமாக கொண்டாடப்படுவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். அதன்படி, பெண் குழந்தைகள் சமூகத்தில் பாதுகாப்பாக வாழுவதற்கு அனைவரும் உறுதி மொழி ஏற்றல், பெண் குழந்தைகளுக்கு பாலியல் குற்றங்கள் நடைபெறாதவாறு, அவர்களுக்கு உரிய பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடத்த ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும் குழந்தைகளுக்கு பாதுகாப்பற்ற சூழலாக உணர்ந்தால் உடனடியாக 1098 என்ற இலவச தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ள வேண்டும். 18 வயதிற்குட்பட்ட பெண் குழந்தைகளுக்கு திருமணம் செய்து வைக்க கூடாது, அவ்வாறு செய்தால், சட்டப்படி தண்டிக்கப்படுவார். மாண்புமிகு தமிழக முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களின் பிறந்த தினமான பிப்ரவரி 24-ஐ மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு தின கொண்டாடப்படுவதை தொடர்ந்து, அனைத்து மக்களும் பெண் குழந்தைகள் சமுதாயத்தில் உரிய அங்கீகாரத்துடன் வாழ்வதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும். என மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெய்னுலாப்தீன், முதன்மைக்கல்வி அலுவலர் ஆ.தியாகராஜன், மாவட்ட மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் ம.கார்த்திகா, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் சாவித்ரி மற்றும் பெண் குழந்தைகள் உட்பட பலர் கலந்துக்கொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**